வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 30-08-2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள் :

பிரதமரின் ஸ்வநிதி யோஜனா திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் 35 லட்சம் பெண்கள் தொழில் தொடங்கி முன்னேறி உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, உஸ்பெகிஸ்தான் நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

நம்பகத் தன்மையே பத்திரிக்கையின் முக்கிய நெறி என, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு, இந்தியா இதுவரை 68.5 டன் நிவாரணப் பொருட்களை வழங்கி உள்ளது.

மோடி – மனதின் குரல் -1 (20)

இளைஞர்களை, போதைப் பழக்கத்தில் இருந்து விடுவிக்கும் வகையில், விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சியை உருவாக்க முன் வருமாறு, சமூக ஆர்வலர்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி, கேட்டுக் கொண்டுள்ளார். அவர் இன்று காலை, ஆகாஷ்வாணியில் நடைபெற்ற **மன் கீ பாத்** நிகழ்ச்சியில், தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அவர் தமது உரையில், போதையில்லாத இந்தியாவை உருவாக்குவதே, நமது நோக்கம் என்று, திட்டவட்டமாகத் தெரிவித்தார். உடல் நலத்தில் அக்கறை செலுத்தும்படி இளைஞர்களை, அவர் கேட்டுக் கொண்டார். போதையின் பிடியில் தனிநபர் பாதிக்கப்பட்டால், ஒட்டுமொத்த குடும்பமும், சமூகமும் பாதிக்கப்படும் என்றும் அவர், தெரிவித்தார். போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பணியில் ஈடுபட்டு வருபவர்களுக்கு, பிரதமர் பாராட்டுத் தெரிவித்தார். போதைப்பொருள் ஒழிப்பு, விழிப்புணர்வு பணியில், இசையமைப்பாளர்களும், எழுத்தாளர்களும் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இளைஞர்களை, போதைப் பழக்கத்தில் இருந்து விடுவிக்கும் வகையில், விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சிகளை உருவாக்க முன்வரும் படி அவர் கேட்டுக்கொண்டார்.

பிரதமரின் ஸ்வநிதி யோஜனா திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் 35 லட்சம் பெண்கள் தொழில் தொடங்கி முன்னேறி உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்தியாவின் பல்வேறு நகரங்களின் சாலைகளில், சிறு-சிறு பொருட்களை விற்பனைச் செய்யும்

## மோடி – மனதின் குரல் – 2 (20)

பணியில், லட்சக்கணக்கான பெண்கள் ஈடுபட்டு வருவதை அவர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். இவர்களுக்காக பிரதமரின் ஸ்வநிதி திட்டம், குறித்து அவர், விளக்கிக் கூறினார். நாடு முழுவதும் இத்திட்டத்தின் மூலம், 35 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்து வருவதாக அவர் தெரிவித்தார். இத்திட்டத்தில் பயனடைவோர், 46 சதவிகிதம் பேர் பெண்கள் என்றும், அவர் குறிப்பிட்டார். **ஒரு பெண் முன்னேறினால் – ஒரு குடும்பம் முன்னேறும்** என்று கூறிய அவர், அத்துடன் குழந்தைகளின் கல்வி, வீட்டின் தேவைகள் நிறைவுபெறும் என்றும் தெரிவித்தார்.

தூய்மை குறித்து, தமது உரையில் குறிப்பிட்ட பிரதமர், தூய்மைக்கு ஒரு குறிப்பிடத்தக்க குணம் உண்டு என்று கூறினார். ஓரிடத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற உறுதி, மக்களின் சொந்த அர்ப்பணிப்பாக மாறும்போது, அது அந்த இடத்தின் அடையாளத்தையே முற்றிலுமாக மாற்றிவிடுகிறது என்றும் அவர் கூறினார்.

தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதால், உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருட்களை வாங்கி ஊக்குவிக்குமாறு, நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். வீடுகள் தோறும் தீபாவளியை முன்னிட்டு, மண்ணிலான அகல் விளக்குகளை வாங்கி ஏற்றும்படி, அவர் கேட்டுக் கொண்டார். இதன் மூலம் தேசத்தின் ஏதோ ஒரு மூலையில் உள்ளவர்களுக்கு வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார். அவகேடோ, பழ சாகுபாடியில் சாதனை படைத்துவரும்,

## மோடி – மனதின் குரல் - 3 (19)

கொடைக்கானலைச் சேர்ந்த விவசாயி திரு. சந்திரசேகரனுக்கு, அவர் மனதின் குரல் நிகழ்ச்சியில் பாராட்டுத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து பேசிய பிரதமர், தமது உரையின் தொடக்கத்தில், மும்பையைச் சேர்ந்த திரு. கிருஷ்ண சேஷாத்ரி என்பவர் உருவாக்கி உள்ள www.bharatrajya.com என்ற வலைதளம் குறித்து பெருமையாகக் குறிப்பிட்டார். பாரதத்தின் எந்த பகுதியில், யார் ஆட்சி செய்து வந்தார்கள் என்பதை, மிகச் சுலபமாக இந்த வலைதளம் மூலம் தெரிந்து கொள்வதாக பிரதமர் தெரிவித்தார். நிகழ்ச்சியில், இந்த வலைதளத்தை உருவாக்கிய திரு. கிருஷ்ண சேஷாத்ரி உடனும், அவர் உரையாடினார். அப்போது இந்திய வரலாற்றில் இடம் பிடித்த 3 பேர்களுடன் பேசுவதற்கு, உங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால், யார் யாருடன் பேசுவீர்கள் என பிரதமர் கேட்டார். மூவரில் முதலாவதாக, மாமன்னர் ராஜராஜசோழன் மற்றும் ராஜேந்திர சோழனுடன் பேச விரும்புவதாக அவர் தெரிவித்தார். இரண்டாவது ஆளுமையான பெயர் ஹேமு, அவரைப் பற்றி இந்திய வரலாற்றில் பார்த்தால், அதிகபட்சம் இரண்டு மூன்று வரிகளில் படிச்சு முடிச்சிடலாம், அந்த ஹேமு ஒரு

சாதாரண குடிமகன். ஒரு வியாபாரி, அவர் தான் ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தை கட்டி எழுப்பினார். 3ஆவது ஆளுமை என்று பார்த்தால், அவர் ஒரு பெண், ஒடிசாவைச் சேர்ந்த திரிபுவன் மஹாதேவி ஆகியோருடன் பேச விரும்புவதாக கிருஷ்ணா தெரிவித்தார்.

## மோடி – மனதின் குரல் - 4 (18)

இவரின் முயற்சி வரலாற்றுத் துறையினருக்கு மட்டுமல்லாமல், அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும் என்று பிரதமர் தெரிவித்தார்.

இன்று, நாட்டின் மகள்களின் கனவுப் பயணம் பூமியிலிருந்து – விண்வெளிக்குச் செல்கிறது என, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உலகம் முழுவதிலும் இருந்து இதுபோன்ற கனவுகளை வளர்க்கும் ஆயிரக்கணக்கான மகள்களை இந்தியா ஒன்றிணைக்கிறது என்றும், பிரதமர் தெரிவித்தார். இந்த முயற்சிக்கு, விஷன் சக்திசாட் என பெயரிடப்பட்டுள்ளது என்றும், இதன் மூலம் 108 நாடுகளைச் சேர்ந்த 12 ஆயிரம் மாணவிகள் செயற்கைக் கோள் தொழில்நுட்பத் துறையை, அறிந்து கொள்ளும் வாய்ப்பை பெறுகிறார்கள் என்றும், பிரதமர் தெரிவித்தார். இந்த மாதம் தேசிய விண்வெளி தினத்தை முன்னிட்டு, உத்தரப்பிரதேச மாநிலத்தின் கிரேட்டர் நொய்டாவில் உள்ள கவுதம் புத்த பல்கலைக் கழகத்தில், சக்திசாட் திட்டத்தின் 2ஆம் கட்ட முன்னோட்டம் காணப்பட்டதாக, அவர் தெரிவித்தார்.

தேசிய கைத்தறி தினம், வெள்ளையனே வெளியேறு இயக்க ஆண்டுவிழா, பிரிவினையின் கொடூரங்கள் நினைவு தினம், போன்றவை இம்மாதத்தில் நினைவு கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார். ஹர் கர் மூவர்ண கொடி பிரச்சாரம், இந்த உணர்வை மேலும் வலுப்படுத்துகிறது என்றும், பிரதமர் தெரிவித்தார்.

## மோடி அரசுமுறைப் பயணம் -1 (8)

4 நாள் அரசுமுறைப் பயணமாக உஸ்பெகிஸ்தான்-கிரிகிஸ்தான், நாட்டிற்குச் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, உஸ்பெகிஸ்தான் நாட்டு விமான நிலையத்தில், உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரது பயணத்தின் முதல்கட்டமாக, தாஷ்கண்ட் நகருக்குச் சென்றார். உஸ்பெகிஸ்தான் அதிபர் திரு. ஷவ்கத் மிர்சியோ அவரை நேரில் வரவேற்றார். இரு நாட்டுத் தலைவர்களும், அந்நாட்டு சுதந்திர நினைவு சின்னத்தில், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இது குறித்து மேலும் சில தகவல்கள்...

## மோடி அரசுமுறைப் பயணம்-2 (19)

உஸ்பெகிஸ்தான் அதிபரை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போது, வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, டிஜிட்டல் இணைப்பு, எரிசக்தி, கல்வி மற்றும் மக்கள் தொடர்புத் துறைகளில் ஒத்துழைப்பு

ஆகியவை குறித்து, ஆலோசனைகள் நடைபெற்றன. தொடர்ந்து இந்தியாவும் – உஸ்பெகிஸ்தானும் இன்று. சுரங்கம், ஆயுர்வேதம், சுற்றுலா, பொருளாதாரம், உயர்கல்வி, சுற்றுச்சூழல், போன்ற துறைகளில், பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. இரு நாடுகளின் வியூக கூட்டாண்மையின் 15ஆவது ஆண்டு நிறைவும், உஸ்பெகிஸ்தானின் 35ஆவது சுதந்திர ஆண்டு நிறைவும் ஒரே நாளில் அமைவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்தார். செப்டம்பர் 1ஆம் தேதி வரும், உஸ்பெகிஸ்தான் சுதந்திர தினத்தை முன்னிட்டு, அந்நாட்டு மக்களுக்கு முன்கூட்டியே வாழ்த்துக்களையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, உஸ்பெகிஸ்தான் அதிபர் அந்நாட்டின் உயரிய விருதை, இன்று, தாஷ்கண்ட்டில் வழங்கினார். இது தொடர்பாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக வலைதளப் பதிவில், இந்த விருதைப் பெறுவதில் பெருமைப் படுவதாகத் தெரிவித்துள்ளார். தமது உஸ்பெகிஸ்தான் பயணத்தைத் தொடர்ந்து, கிரிகிஸ்தான் செல்லும் பிரதமர், நாளை, ஷாங்காய் உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

## முர்மு (6)

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, நாளை, புதுடெல்லியில் நடைபெறும் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கழகத்தின் ஒருங்கிணைந்த பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க உள்ளார். இந்த பட்டமளிப்பு விழாவில், நாடு முழுவதிலும் இருந்து, 18 மாணவர்கள், பங்கேற்க உள்ளனர். இந்நிகழ்ச்சியில், மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங், மற்றும் பல அதிகாரிகள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்க உள்ளனர்.

## குடியரசு துணைத் தலைவர் (11)

நம்பகத் தன்மையே பத்திரிக்கையின் முக்கிய நெறி என, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், தெரிவித்துள்ளார். 2 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று கேரள மாநிலத்திற்குச் சென்றுள்ள அவர், ஆலப்புழாவில், கௌமுதி நாளிதழின் 115ஆவது ஆண்டு விழா கொண்டாட்டங்களை அவர் தொடக்கி வைத்தார். மேலும், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நெறிமுறைகளை கைவிடாமல், பத்திரிக்கைத் துறையில் பணியாற்றி வரும் கேரள கௌமுதிக்கு அவர் வாழ்த்துத் தெரிவித்தார். தொடர்ந்து, கேரளாவின் ஆரன்முலா படகுப் போட்டியையும் அவர் தொடக்கி வைத்தார். திருவனந்தபுரத்தில் நடைபெறும் ஓணம் சுற்றுலா வாரக் கொண்டாட்டங்களின் நிறைவு ஊர்வலத்தையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

## நேபாள் -1 (4)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு, இந்தியா இதுவரை 68.5 டன் நிவாரணப் பொருட்களை வழங்கி உள்ளது. மேலும், தேடுதல் மற்றும்

மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்காக தொழில்நுட்ப குழுக்கள், தடவியல் நிபுணர்கள், மற்றும் உபகரணங்களையும் இந்தியா அனுப்பி உள்ளது. இது குறித்து மேலும் தகவல்கள்...

நேபாள் - 2 (16)

11 டன் நிவாரணப் பொருட்களுடன் இந்தியாவின் 4ஆவது விமானம் இன்று நேபாளம் சென்றுள்ளதாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் சார்பில், தடயவியல் நிபுணர்களையும், DNA பகுப்பாய்விற்கான உபகரணங்களையும், போர்வைகள், உறங்கும் பைகள், தார்ப் பாய்கள், சுகாதாரப் பெட்டிகள் உள்ள நிவாரணப் பொருட்களும் அனுப்பப் பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும், 230 அடி நீளமுள்ள பாலத்தை கட்டுவதற்கான உபகரணங்களையும் 16 லாரிகளில் அனுப்பப் பட்டுள்ளன. இமயலை சுனாமி என அழைக்கப்படும் பேரழிவு வெள்ள அபாயத்தால் உருக்குலைந்த நேபாளத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை, 768ஆக அதிகரித்துள்ளது. 5ஆவது நாளாக மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்ற வரும் நிலையில், 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கி மாயமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேபாளத்தில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க, 15 ஆயிரம் வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக அந்நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ளார். அவர் தமது, உரையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியை வெகுவாக பாராட்டி உள்ளார்.

மன்சுக் மாண்டவியா (7)

சைக்கிள் ஓட்டுவது என்பது உடல் நலனை பேணுவதற்கான ஒரு வழிமுறை என்றும், மாசற்ற சூழலுக்கு முக்கியமானது என்றும், இது போக்குகுவரத்து நெரிசலுக்கான ஒரு தீர்வு என்றும், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளாா. புதுடெல்லியில், இன்று நடைபெற்ற ஃபிட் இண்டியா சன்டேஸ் சைக்கிள் ஓட்டும் நிகழ்ச்சியின், 88ஆவது நிகழ்ச்சியில் பங்கேற்றார். இந்நிகழ்ச்சி நாடு முழுவதும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்றது.

ஃபிட் இந்தியா – புதுச்சேரி (9)

புதுச்சேரி அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் துறை மத்திய அரசின் ஃபிட் இந்தியா மற்றும் கேலோ இந்தியா இயக்கங்கள் சார்பில் இன்று, கடற்கரை காந்தி திடலில், சண்டேஸ் ஆன் சைக்கிள்ஸ் மிதிவண்டி உடற்பயிற்சி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். மிதிவண்டி உடற்பயிற்சி உறுதி மொழியை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். மாநில விளையாட்டுத்துறைச் செயலர் திரு. கிருஷ்ணன் மோகன் பங்கேற்றார்.

**மூப்பனார் – புதுச்சேரி (5)**

புதுச்சேரியில் மக்கள் தலைவர் ஜி.கே மூப்பனாரின் நினைவு தினம் இன்று அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. முதலியா ா பேட்டை மரப்பாலம் சிக்னல் அருகே அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ஜான்குமார், திரு. ஐய்யப்பன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**மீண்டும் தலைப்புச் செய்திகள் :**

பிரதமரின் ஸ்வநிதி யோஜனா திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் 35 லட்சம் பெண்கள் தொழில் தொடங்கி முன்னேறி உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, உஸ்பெகிஸ்தான் நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

நம்பகத் தன்மையே பத்திரிக்கையின் முக்கிய நெறி என, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு, இந்தியா இதுவரை 68.5 டன் நிவாரணப் பொருட்களை வழங்கி உள்ளது.